මගේ අංකය / எனது இல. / My No. ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இல: 07 / 2022 (II)
ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................
දිනය / திகதி / Date 2023.02.23

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்,
பிரதேச செயலாளர்கள்.

**ஓய்வூதியர்களின் உயிர் வாழ்ச் சான்றிதழ்கள் – 2023**

மேற்படி விடயம் தொடர்பில் என்னால் வெளியிடப்பட்ட 2022.12.13 ஆம் திகதிய 07/2022 ஆம் இலக்க ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம் மற்றும் 2022.12.30 ஆம் திகதிய 07/2022(1) ஆம் இலக்க ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம் அகியவற்றின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. அக் கடிதங்கள் ஊடாக கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட இணைப்பு 01 - படிவம் ஓய்வூதியர்களால் கையொப்பமிடப்பட்டு கிராம அலுவலரால் சான்றளிக்கப்பட்டு 2023.02.15 ஆம் திகதிக்கு முன்னர் தங்களால் சேகரிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட படிவங்களுக்கு அமைய ஓய்வூதிய அலுவலரினால் தரவுத் தளமானது புதுப்பிக்கப்பட வேண்டும். மேலும் தரவுத் தளமானது புதுப்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை கிராம அலுவலர் அலுவலகத்திற்கு வருவதற்கு அல்லது விரலடையாளர் மூலம் உயிர்வாழ்ச் சான்றிதழினை புதுப்பித்துக்கொள்வதற்கு முடியாமல் போன ஓய்வூதியர்களின் விபரங்கள் தரவுத் தளத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் ஆவணமானது 2023.03.01 ஆந் திகதிக்கு முன்னர் உரிய கிராம அலுவலர் பிரிவு உள்ளீடு செய்யப்பட்டு உடனடியாக கிராம அலுவலர்களிடம் மீள கொடுக்கப்பட வேண்டும் என்பதுடன் கிராம அலுவலரினால் இவ் ஆவணவமானது பூரணப்படுத்தப்பட்டு 2023.03.31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளரின் கையளிக்கப்பட்டு இப் பணியினை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

03. ஓய்வூதியர் ஒருவர் ஊனமுற்று, நோயுற்று அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட காரணங்களினால் அவரது நிரந்தர குடியிருப்பு அமைந்துள்ளது கிராமா அலுவலர் பிரிவுக்கு வெளியே வசிக்கும் சந்தர்ப்பத்தில் உயிர்வாழ்ச் சான்றிதழை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக உரிய ஓய்வூயரின் எழுத்து மூலமான கோரிக்கையானது தற்போது தற்காலிகமாக வசிக்கும் பிரிவின் கிராம அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டு பிரதேச செயலாளரின் மேலொப்பம் இடப்பட்டு ஓய்வூதிய கோவை பாராமரிக்கப்படும் பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு எழுத்து மூலம் சான்றுப்படுத்தப்பட்ட ஆவணம் ஓய்வூதிய கோவை பராமரிக்கப்படும் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றதும் ஓய்வூதிய அலுவலரினால் ஓய்வூதியரின் உயிர்வாழ்ச் சான்றிதழ் புதுப்பிக்கப்படும்.

04. தரவுத் தளத்தின் இயல்புக்கு அமைய பாதுகாவலர் ஊடாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் விபரங்கள் இணைப்பு 01 படிவத்தில் பெறப்படும் போது ஓய்வூதியருக்கு பதிலான பாதுகாவலர் கையொப்பமிடுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதனால் அவ்வாறான சந்தர்ப்பங்களை இனங்கண்டு பாதுகாவலருக்கு பதில் ஓய்வூதியரின் கையொப்பம் பெறப்பட வேண்டுமென கிராம அலுவலர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். பிரிவுகளுக்கு உரிய பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ள ஓய்வூதியர்களின் விபரங்கள் பிரித்தறியப்பட்டு கிராம அலுவலர்களிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

05. 2023.03.31 ஆந் திகதி கிராம அலுவலர்களிடமிருந்து ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு, 2023.04.12 ஆம் திகதிக்கு அத் தகவல்களுக்கு ஏற்ப தரவுத்தளமும் புதுப்பிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பம்./ஏ.ஜகத் டீ.டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்